# தேர்தல் அரசாங்கம்

ஜனநாயக ஆட்சி என்பது யாது? தேர்தல் என்பது என்ன? இதையெல்லாம் நாட்டார் ஐயமற அறியவேண்டும். நாட்டின் நிலைமையும் நன்மையையும் நாட்டிலுள்ளோர் ஒவ்வொருவரும் அறிந்துணற வேண்டும். ஏனெனில் ஜனநாயகம், ஜனங்களின் ஆட்சிதான், ஜனங்கள் நடத்தும் அரசியல், ஜனங்களுக்காக நடக்கும் அரசாட்சி. அவரவர் கடமையை அவரவர் உணரவேண்டுமல்லவா? மக்கள் தமக்குத் தாமே வழங்கிகொள்ளும் இந்த அரசியல் அதிகாரமும், தங்களைத் தாமே ஆண்டுகொள்ளும் அரசாட்சி முறையும் எத்தகையன என்பதை ஏனையோரும் ஆராய்ந்துணர வேண்டாமா?

ஆளப் பிறந்தவர்கள் சிலர், அடங்கி வாழப்பிறந்தவர்கள் பலர் என்னும் உரிமை வேற்றுமை ஜனநாயக ஆட்சிமுறையில் கிடையாது. சமத்துவம் ஜனநாயகத்தின் சிறப்பு. சட்டத்தின் முன்பு யாவரும் சமம். அரசியலிலே எல்லோருக்கும் சம உரிமை. ஆட்சிமுறையை அமைப்பதிலே ஏனையோரும் அதிகாரம் பெற்றவர்கள். முடியரசுகளான இங்கிலாந்திலும், ஜப்பானிலும்கூட ஜனநாயக ஆட்சிதான் நடக்கிறது. பிறப்புரிமையினால் நாட்டின் தலைமையை மன்னர் வகித்தாலும், பொதுமக்களின் விருப்பு வெறுப்புகளுக்குத்தான் வலிமை அதிகம்.

முடியரசுகள் அல்லாத குடியரசுகளிலே ஜனநாயகம் நடவாமல் சர்வாதிகாரம் என்னும் அடக்குமுறை நடப்பதும் உண்டு. அங்கே ஜனங்கள் சர்க்காருக்கு அடக்கம்.

ஆனால் நமது இந்தியா ஜனநாயக குடியரசு. ஜனங்களுக்காக சர்க்கார் இயங்குகிறது. பொதுமக்களுக்குக் கட்டுப்பட்டு அதிகார ஆட்சி நடக்கிறது.

பொதுமக்களாகிய நாம் நாடாள்வதிலே பங்கு எடுத்துக்கொள்கிறோம். எப்படி?

நமது நாடு பெரியது. மக்கள் அனைவரும் ஒரிடத்திலே கூடி நேரிடையாக சட்டதிட்டங்களை வகுப்பது இயலாது. அதனால் நாம் நமது பிரதிநிதிகள் சிலரைத் தேர்ந்தெடுப்போம். அவர்கள் மூலம் மறைமுகமாக ஆட்சியில் பங்கு கொள்வோம். நமது சார்பாக நாம் தேர்ந்தெடுக்கும் பிரதிநிதிகள் தாம் சபை கூடி அவ்வப்போது சட்டங்களை வகுத்து, அதிகார வர்க்கத்தை கட்டுப்படுத்துவார்கள். மக்களின் குரல், சட்டசபையின் குரல், செயல்.

பொதுமக்களின் சார்பாக அதிகார உரிமை ஏற்கும் பிரதிநிதிகள், பொதுநலம் மறந்து சுயநலம் கொண்டு கடமையிலே பிறழுவது உண்டு. அப்பொழுது பொதுமக்கள் கூக்குரலிட்டு, கூட்டங்கூடி, அதிருப்தியை வெளியிட்டு, கடமை தவறிய பிரதிநிதியை விரட்டிவிடமும் வசதியுண்டு.

இத்தகைய உரிமைகளினாலும் சலுகைகளினாலும் மக்கள் திருப்தியுடன் வாழ வகை ஏற்படுகிறது. கசப்புடன் அரசாங்கத்திற்கு இணங்காமல், களிப்புடன் வணங்குவார்கள். புரட்சிகளும் புரைசல்களும் எழமுடியாது. நாட்டில் அமைதி நிலவும். நாடு செழிக்கும்.

நாம் நமது பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அவர்கள் மூலம் அரசியலை வகுப்பதற்காக நமக்கு 'வோட்டு' உரிமை கிடைத்திருக்கிறது. ஏழை, பணக்காரர், கட்சி பாகுபாடுகள், ஆண் பெண் என்னும் வேற்றுமை இன்றி மக்கள் ஏனையோருக்கும் கிடைத்திருக்கிறது இந்த வோட்டுரிமை. இதுதான் சர்வஜன ஓட்டுரிமை. சிறுபான்மைக் கட்சிகளுக்குங்கூட, ஜனத்தொகைக்கேற்ப, சட்டசபையில் இடமிருக்கிறது.

ஜனநாயகமும், சர்வஜன வோட்டுரிமையும் நாட்டிற்கு நன்மை பயப்பதாகா என்று சொல்வார் உண்டு. எங்குமே பூரணத்துவம் இல்லை; சந்திரனுக்குரிய களங்கங்களும் உண்டு.

பாமர மக்களே - பெருவாரியான பொதுமக்கள்- அரசியலை சிறப்புற வகுக்க இயலுமா? அரசியல் நுணுக்கங்களை உணரமுடியுமா? பாமரர் நடத்தும் ஆட்சி ஒரு கேலிக்கூத்து போலாகிவிடாதா? பாமரன், தன்னைவிட அறிவிற் சிறந்தவர்களின் சேவையைப் பாராட்டுவானா? 'நானே பதவியில் இருப்பேனாகில் .. .?' என மார்தட்டும் மனப்போக்குடையவனாகிவிட மாட்டானா? எதற்கும் தர்க்கம் - எதிர்ப்பு என்று ஏற்பட்டுவிடாதா?

தேர்தல் முழக்கங்களுடன் நேரம் போக்கிக்கொண்டு, காரிய சாதனையைத் தடுத்துவிடும் ஜனநாயக ஆட்சி விரும்பத்தக்கதுதானா?

இந்த வினாக்கள் ஜனநாயகத்திற்கு வினைகள், ஜனநாயகத்தில் தென்படும் குறைபாடுகள்.

ஆனால் இந்தக் குறைகளைப் பெருங்குறைகளாகக் காண்பதும் சரியன்று.

ஏனெனில் பொது அறிவும், அரசியல் ஞானமும், பகுத்தறிவிற்குப் பின்வாங்கவேண்டியவைதாம். பொதுமக்களில் பெரும் பகுதியினரான பாமரர்கள் கல்வியறிவில் குறைந்திருப்பினும், நாட்டு நடப்பு, நாட்டின் நன்மை தின்மை, தேவை, காலப் போக்கு ஆகியவற்றை உணர்ந்தவர்கள்தாம். அரசியலை அமைப்பதிலும், நாட்டின் பொது நன்மையை வகுப்பதிலும் ஒரு பொறுப்பான உரிமை இருப்பது பற்றி அவர்கள் பெருமிதமடைவதே போதுமானது. அதுவே நாட்டின் அமைதிக்கு அடித்தளம். அதுவே அவர்களுடைய ஊக்கத்தைக் கிளறி அறிவு வளர வழிசெய்யும். தேசபக்தி வளர்ந்தோங்கும்.

குற்றவாளிக் கைதிகள், சித்தசுவாதீனமற்றவர்கள், இருபத்தோரு வயது நிரம்பாத ஆண் பெண்பாலார் - ஆகியோர் இந்த சர்வஜன வோட்டுரிமை படைத்தவர்கள் அல்லர். ஆதலால் நாட்டில் தீங்குவிளையக் காரணமில்லை.

சிறுபான்மைக் கட்சிகளையும், சிற்சில பகுதியினரையும் ஒதுக்கிவைப்பது அநீதி; அவர்களுடைய முறையீடுகளை அலட்சியம் செய்து அடக்குவதாகும். தாய்நாடு மக்களை எல்லாம் ஒரு நோக்குடன் நோக்கவேண்டும். மாற்றாந்தாய் போன்று விளங்ககூடாது.

பாமரர் பிற்போக்குள்ளவர்களாகவே இருக்கலாம். சூடிகையில் குறைந்த குழந்தையைத்தான் தாய் அதிகக் கனிவோடு கவனித்து அதன் மனவளர்ச்சிக்கு ஆக்கமூட்டி நற்பண்புகளை வெளிவர செய்யவேண்டும். அதேபோல, பிற்போக்குள்ள பாமரர்களுக்கு முன்னேற வசதிகள் அளிக்கப்படவேண்டும். ஐந்து வயது குழந்தைக்கு நடக்கத் தெரியவில்லை என்றால், அதன் கால்களைக் கட்டிப்போடுவது சரியன்று. சிகித்சையும் ஆதரவும் கொடுத்துவிடவேண்டும்.

ஏழை ஒருவனுக்கு, எப்போதும், எங்கும் எளிய உணவுதான் கிடைக்கிறது. சீமான் ஒருவனுக்கு, எந்த சமயத்திலும் விருந்துணவு கிடைக்கிறது. ஏழை அறுசுவை உண்டியின் அருமை சிருமைகளை அறியவே இடமில்லை. சீமானுக்கு எளிய உண்டியின் பெருமை குறைகளை உணர வழியில்லை. இது எத்தகைய பரிதாபம்!

ஜனநாயக ஆட்சிமுறையில், சர்வஜன வோட்டுரிமை மூலம் நடக்கும் பிரதிநித்துவ அரசாட்சியில் அதிருப்தியும், அறிவின்மையும் விலகும். நாட்டின் பண்பு உயரும்.

பொதுமக்களாகிய நாம், ஜனநாயகத்தின் குறைபாடுகளை உணர்ந்து, எச்சரிகையுடன் அவற்றைத் தடுத்துக்கொண்டே, முன்னேறிச் செல்லவேண்டும். நமக்குக் கிடைத்திருக்கும் வோட்டுரிமையை செல்வனே பயன் படுத்தும் சந்தர்ப்பம் நெருங்குகிறது. பொது தேர்ந்தல் அணுகிவருகிறது.

நமது செயலின் பலாபலன்களை நாமும், நன் நாட்டவரும்தான் அனுபவிப்போம். தேர்ந்தலுக்குப் பின்னர் வரவிருக்கும் பலன்களை நாம் முன்னதாகவே ஆராய்வது புத்திசாலித்தனம். ஏன், அவசியமும்கூட. சுயநலத்தின் கறை படாத நம் செயல்தான் நம்மையும் நமது மாபெரும் பாரத சமுதாயத்தையும் செழிப்புறச் செய்யும்.

நாம் சர்வஜன வோட்டுரிமையுடன் அமைக்கும் சபைகள் இரண்டு.

நாம் நமது ராஜ்யங்களிலே தேர்ந்து எடுக்கும் பிரதிநிதிகள் அடங்கிய சபை ‘ராஜ்ய அசெம்பிளி’. நாம் நமது நாட்டிலே தேர்ந்தெடுக்கும் பிரதிநிதிகள் அடங்கிய சபை ‘மத்திய பார்லிமெண்ட்’.

பெரிய ராஜ்யங்களிலே சட்டசபை இரு பிரிவுகளுள்ளது. சிரிய ராஜ்யங்களில் பிரிவு இல்லை.

‘பார்லிமெண்ட்’ இரு பிரிவுகள் கொண்டது. கீழ்சபை, மக்களின் சர்வஜன வோட்டு மூலம் அமைந்தது. மேல்சபை, மக்களின் சார்பாகி மாகாணப் பிரதிநிதிகள் அமைப்பது - ஆகக்கூடி, நேர்முகமாகவும் மறைமுகமாகவும் நாம்தான் பார்லிமெண்டை அமைக்கிறோம்.

ராஜ்ய சட்டசபைகளும், பார்லிமெண்டின் இரு சபைகளும் சேர்ந்து வோட்டுப் போட்டு, நாட்டின் தலைவராகிய ஜனாதிபதியை தேர்ந்தெடுப்பர்.

ஜனாதிபதி, மாகாணத் தலைவர்களை நியமனம் செய்வார். மந்திரிகளும், பிரதம மந்திரியும் கொண்ட ஐக்கிய நிர்வாக சபையை அமைத்துக் கொள்வார்.

ஜனாதிபதி நியமனம் செய்யும் மாகாணத் தலைவர்கள் மாகாண மந்திரி சபையை அமைப்பார்கள்.

சட்டத்தைக் காக்கும் நீதிமன்றங்களையும் ஜனாதிபதி அமைப்பார். ராஜ்யத் தலைவரும், மந்திரிகளும் ராஜ்ய சட்டசபைகளின் பொறுப்பிலுள்ளவர்கள். ஜனாதிபதியும், ஐக்கிய மந்திரி சபையும், ஐக்கிய பார்லிமெண்டிற்குக் கட்டுப்பட்டவர்கள்.

பொதுமக்களின் சிருஷ்டிகளான இந்த ராஜ்ய சட்டசபைகளும், பார்லிமெண்டும் அரசாங்கத்தைக் கட்டுப்படுத்துகின்றன என்பது தெளிவாகிறது.

தேசப் பாதுகாப்பு, இராணுவம், ரயில் இலாகா, தபால் இலாகா, நாணய செலாவணி, அயல் நாட்டு உறவு, வர்த்தகம் ஆகிய விஷயங்கள், நாட்டிற்குப் பொதுவான பெரிய விஷயங்கள்.இந்தப் பெரும் பொறுப்புகளை மத்ய சர்க்கார் ஏற்கிறது.

மக்களின் அன்றாட வாழ்வுடன் தொடர்பு கொண்ட விஷயங்களான உணவு, கல்வி, சுகாதாரம், விவசாயம், கலை, நீதி, ஆகியவற்றை ராஜ்ய சர்க்கார்கள் ஏற்கின்றன.

சில விஷயங்கள் இரண்டு சர்க்காருக்கும் பொது. வேறுசில விஷயங்களை இரண்டு சர்க்கார்களும் சந்தர்ப்பத்தையொட்டி, தமக்குத் தாமாக நிர்வகித்துக்கொள்ள உரிமை இருக்கிறது. அதேபோல, சில நெருக்கடிகளில் ஜனாதிபதி, சொந்த தீர்மானத்துடன் பிரகடனங்கள் செய்யவும் இடமுண்டு. மக்களுக்குக் கட்டுப்பட்டவர்தான் எனினும், அதிகார அநுபவங்களிலேஉயர்ந்தவர் ஆதலின், நெருக்கடிகளை சமாளிக்கவேண்டிய சமயங்களிலே அவர், தர்க்கம், காலவிரயம் ஏற்படாதவாறு நடந்துகொள்ள முடியும்.

ராஜ்யங்களில், பிரிவுகள் இல்லாத சட்டசபைகளிலே நிறைவேறும் மசோதா எளிதிலே சட்டமாகிவிடும். ஆனால் இரண்டு பிரிவுகள் உள்ள பெரிய ராஜ்ய சட்டசபைகளிலே மசோதா நிறைவேறத் தாமதமாகும். கீழ்ச்சபையில் நிறைவேறும் மசோதா மேல்சபையிலே காக்கவேண்டிவரும். மேல்சபை தன் கருத்துகளுடன் அதை மீண்டும் கீழ்ச்சபைக்கு அனுப்பும். திருத்தங்களை ஏற்கவோ, மறுக்கவோ கீழ்ச்சபைக்குச் சக்தி உண்டு. இரண்டு சபைகளின் கருத்துகளும் ஒத்துவராத சமயங்களிலே கீழ்ச்சபையின் தீர்ப்புதான் முடிவானது.

ராஜ்ய சட்டசபைகளிலே மட்டுமின்றி, பார்லிமெண்டிலும் ஏறக்குறைய இதேபோல்தான் நடக்கும்.

ஜனங்கள், சர்வஜன வோட்டு மூலம் நேர்முகமாக அமைக்கும் கீழ்ச்சபைக்கு வலிமை அதிகம்.

செயல் உரிமையும் மரியாதையும் உள்ள மருமகள் போன்று கீழ்ச்சபை விளங்கும் - பெரியவர் ஸ்தானத்திலே, மதிப்பாய் இங்கிதமாய் வீற்றிருக்கும் மாமியாரைப் போல.

கணவன் தோசைக்கு மசாலாக்கறி விரும்புவதை மருமகள் மாமிக்குத் தெரிவிக்கிறாள். “மசாலா நெடி பிடிக்காது அவனுக்கு; சட்டினியை அரைத்துப்போடு” என்று மாமியார் கூறுகிறாள். கணவன் மசாலாக்கறிதான் கேட்டான் என்று மருமகள் விளக்கினாலும் மாமியார் நம்புவதில்லை. “எனக்குத் தெரியும் என் மகனின் விருப்பு வெறுப்புகள்” என்று கூறுகிறாள். “எனக்குத் தெரிகிறது என் கணவரின் விருப்பு வெறுப்புகள்” என்று தீர்மானித்து மருமகள் கணவன் விரும்பிய கறியை தோசையுடன் படைக்கிறாள். சட்டினியும் அரைக்க முடிந்தால் அரைக்கிறாள்; முடியாவிட்டால், அதற்காக வருந்துவதில்லை.

இது குடும்பத்தில் ஒரு கட்டம். கீழ்ச்சபை பொதுமக்களுக்கிசைந்த மசோதாவையே சட்டமாக்க முயலும் என்பதைக் குறிக்கும் ஒரு உதாரணம்.

மசோதாக்களை மேல்சபைகளிலே துவக்குவதும் உண்டு. மேல்சபையிலே நிறைவேறும் மசோதா கீழ்ச்சபையில்தான் சட்டமாக முடியும். கீழ்ச்சபையின் திருத்தங்களுக்கும், முடிவுக்கும்தான் சக்தி அதிகம். ஏன்? பொதுமக்களாகிய நாம் அமைத்த சபை அது.

தேர்தலுக்கு நிற்கும் அபேட்சகர்களின் ஆடம்பரப் பிரசாரத்திற்கும், விளம்பர கோஷங்களுக்கும், வாய்வீச்சுக்கும், வலைவீச்சுக்கும் உட்படாமல், அபேட்சகர்களின் அனுபவ அறிவு, அரசியல் தொடர்பு ஆகியவற்றின் தகுதியை அறிந்து, புத்திசாலித்தனமாகத் தேர்ந்தெடுப்போம்.

பொதுமக்கள் விரும்புவது நாட்டின் நன்மைதான். நாட்டிலே கிளம்பியிருக்கும் பலதரக் கட்சிகள் விரும்புவதும் நாட்டின் நன்மைதான். தேர்தலுக்கு நிற்போரும், தேர்ந்தெடுப்போரும் நாடுவது ஒரே லட்சியம்தான். தேசத்தின் செழிப்புத்தான் அந்த லட்சியம்.

ஆனால் லட்சியத்தை எட்டிப்பிடிக்கும் வழிகளிலேதான் வித்தியாசங்கள் இருக்கின்றன; கட்சிகள் வேறுபடுகின்றன; லட்சியப் பாதையில் பிரிந்துபோகின்றன.

எது சிறந்த வழி? எந்தக் கட்சியின் பண்பு நாட்டிற்கு உயர்வு கொடுக்கும்? அமைதியை நிலைநிறுத்தும்?

எந்தெந்தக் கட்சிகளின் கொள்கைகளிலே நமக்கு உறுதி ஏற்படுகிறதோ, அந்தந்த கட்சிகளிலே நிற்கும் அபேட்சகர் பலரில் தகுதியுள்ள சிலரைத் தேர்ந்தெடுப்போம்.

ஒவ்வொரு கட்சிக்கும் தனித்தனி வோட்டுப் பெட்டி உண்டு; பெட்டியின்மேல், அவரவர் கட்சிக்கு உரியதொரு சின்னமும் உண்டு. நாம் அளிக்கும் வோட்டினை பிறர் அறியத் தேவையின்றி நாம் அளிக்க இந்த வோட்டுப் பெட்டிகள் உதவுகின்றன.

அபேட்சகர்களில் ஒருவரான ஒரு ஜமீந்தாரிடம் அண்டி நிற்கும் ஏழை விவசாயி, தன் மனதிற்குகந்த வேறு அபேட்சகருக்கு தைரியமாக வோட்டுப் போடமுடியும். இதுதான் ரகசியவோட்டுப் போடுவதிலுள்ள சிறப்பு. ஒவ்வொரு ஊரிலும் பல முக்கியமான இடங்களிலே, விடுமுறை நாட்களிலே தேர்தல் நடக்கும். போக்குவரவுக் கஷ்டம், செலவு, தொழிலுக்குக் குந்தகம்.

மக்கள் எதிர்ப்பார்ப்பது உணவுச் செழிப்பு, தொழில் முன்னேற்றம், வாழ்க்கைச் சுதந்திரம், நாட்டின் உயர்வு, கலைவளர்ச்சி, இன்ப வாழ்வு.

தங்கள் சார்பாக, தாங்கள் தேர்ந்தெடுக்கும் பிரதிநிதிகள், இந்தப் பிரச்னைகளைத் தீர்த்துவைப்பார்கள் என்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள்; பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கிறார்கள். மக்களின் சார்பாக அதிகாரம் ஏற்கும் பிரதிநிதிகள் கடமையை மறவக்கூடாது.

பொது நன்மையைக் கருதி பிரதிநிதிகள் சட்டங்களை இயற்ற, அந்தச் சட்டங்களுக்கு ஒத்து

மந்திரிசபைகள் நிர்வாகம் செய்யும். சட்டங்களுக்கும் நிர்வாக முறைகளுக்கும் அரசாங்க முத்திரையிட்டு, நாட்டினைத் தாங்குபவர் ஜனாதிபதி.

ஜனாதிபதியும், அவரைச் சார்ந்தவர்களும் அரசியல் அமைப்பிற்குப் பாதுகாப்பாளர்.

பொது மக்களாகிய நாம், நமது பிரநிதிகளின் மூலம் அந்த அரசியலை அழகும் அருமையும் துலங்கி உருவாக்கிக் கொடுக்கவேண்டும்.

தேர்தல் கேட்கும் பணி இதுதான். நமது கடமை முடுக்கும் பொறுப்பு இதுதான்.

சமூக, பொருளாதார அரசியல் நீதியும், சிந்தனை, சொல், உடை, தெய்வ வழிபாடு ஆகியவற்றில் சுதந்திரமும், கலை, கல்வி, விஞ்ஞானம், ஆகியவற்றில் உயர்ந்த அந்தஸ்தும், சிறப்பும் ஏற்படும் வகையில் அரசியலை நமக்கு நாமாக வழங்கிக்கொள்ள பொதுத் தேர்தல்தான் அடிகோலும்.

**********

(சுதேசமித்திரன், டிசம்பர் 12, 1951)